# 16 எழுத்துருக் கட்டமைப்புக்கும் உள்ளடக்கத்துக்குமான பரிந்துரைகள்

**இலக்கு**

இல. 9இல் "கால வரிசை", "திட்ட முன்னுரை / பெரும்பகுதி / நிறைவு" என்பவற்றில் விவரிக்கப்பட்ட உத்திகளுக்கு மேலாக பின்வரும் செயற்படுமுறைகள் எழுத்துருவைக் கட்டுதலையும் கட்டமைத்தலையும் திட்டமிடல் மற்றும் பயிற்சித்தல் மீது கவனம் செலுத்துகின்றன. அவை உத்திகளை கவர்ச்சியுள்ள சூழல்களில் பயிற்சி செய்ய மாணவர்களுக்கு வாய்ப்புகளை வழங்கும் நோக்குடையன.

## 1. வெட்டிய எழுத்துருக்களுடன் செயற்படல்

2 - 6 ஆந் தரம் | 20 மணித்துளிகள்

கீற்றுகளாக (ஒரு கீற்றில் ஒரு வாக்கியம்) வெட்டப்பட்ட எழுத்துருக்களை ஆசிரியர் (5 – 10 வயதுக்குப் பொருத்தமான வாக்கியங்கள்) பகிர்கிறார். தெரிவுசெய்யப்பட்ட எழுத்துரு தெளிவான தொடர் கட்டமைப்புடன் செயல் சார்ந்ததாக இருக்கவேண்டும். பணி: வாக்கியங்களை வகைப்படுத்தி எழுத்துருவை திரும்ப ஒருங்கு சேர்த்து ஒட்டுக. நிகழக்கூடிய மேலதிக பணி: கூடுதல் வாக்கியங்களாலும் கீற்றுகளாலும் எழுத்துருவைப் பெருப்பிக்குக, அல்லது கீற்றுகளை எழுத்துருவின் முன்னுரை / பெரும்பகுதி / நிறைவு என்னும் பகுதிகளில் எவற்றைச் சார்ந்தன என அடையாளமிடுக.

## 2. படக்கதைகளுடன் செயற்படல்

2 - 9 ஆந் தரம் | 30 மணித்துளிகள்

கருவிகள்:
வெட்டிய படக்கதை

தனியாக அல்லது இணையராக, மாணவர்கள் ஒரு வெட்டிய படக் கதையை (4 – 8 படங்கள்) பெறுகின்றனர். அவர்கள் படங்களைச் சரியான தொடரில் ஒழுங்கமைத்து, ஒரு தாளில் அவற்றை ஒட்டி, ஒரு படத்துக்கு 1 – 2 வாக்கியங்களால் நிகழ்வுகளை விவரிக்கப் பணிக்கப்பட்டனர். நிகழக்கூடிய மேலதிக பணி: ஒரு முன்னுரையும் முடிவுரையும் எழுதுக. படக்கதைகளுக்கு மூலங்கள்: இதழ்கள், செய்தித்தாள்கள், நகைச்சுவைகள், இணையம், படக்கதை அட்டைகள் (எ.கா. Verlag Schubi Lernmedien, Schaffhausen, in vielen Schulhäusern vorhanden).

